**CC.900/2025** Date: 27.04.2026

Page No.

**அ.சா.2, ஆறுமுகம் த/பெ. ராஜா** வயது.70

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:– (எதிரி ஆஜர்)</u>**

நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சுமார் 11.15 – 11.20 மணியளவில் சென்றிருப்பேன். சம்பவம் குறித்து போலீசார் மருத்துவமனையில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எனது மகனிடம் வாங்கினார்கள். சம்பவயிடத்தில் 3–4 வீடுகள் உள்ளது. சம்பவத்தின் போது எங்களை தவிர்த்து வெளியாட்கள் வேறு யாரும் அங்கு இல்லை. சம்பவம் நடந்த அன்றைய தினம் நான்கு மணி அளவில் காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். காவல்துறையினரிடம் சம்பவ இடம் குறித்த ஆவணத்தினை ஒப்படைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் எதிரியை தாக்கி விட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யான புகாரினை அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.04.27 18:00:32 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.

**அ.சா.1, சரண்ராஜ் த/பெ. ஆறுமுகம்** வயது.36

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:– (எதிரி ஆஜர்)</u>**

166/3A3 என்ற சர்வே எண்ணில் எனக்கு நிலம் உள்ளது. இந்த நிலம் சம்பந்தமாகவும் 166/3B என்ற சர்வே எண் கொண்ட நிலம் சம்பந்தமாகவும் எங்களுக்குள் பிரச்சனை உள்ளது. மேற்படி விவரத்தினை காவல்துறையினரிடம் அளித்த புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் நிலப்பிரச்சினை என்று மட்டுமே கூறியுள்ளேன். 166/3A3 என்ற சர்வே எண்ணில் உள்ள நிலத்திற்காக சம்பவம் நடந்தது. மேற்படி சர்வே எண் குறித்து காவல்துறையினரிடம் கூறினேனா என்றால் இல்லை. காவல்துறையினரிடம் சம்பவ இடம் எங்களுக்கு சொந்தமானது என்பதற்காக ஆவணத்தினை அளித்தேனா என்றால் இல்லை. எதிரி எனது தந்தையை அவர் கையில் வைத்திருந்த கம்பியால் எனது தந்தையில் இடது கையில் அடித்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ளதை நான் அளித்த புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவயிடத்தில் 2 வீடுகள் உள்ளது (200 மீ தொலைவில்). சம்பவயிடத்திலிருந்து கூச்சல் சத்தம் மேற்படி வீடுகளுக்கு கேட்காது என்றால் சரிதான். சம்பவத்தின்போது, எதிரி மற்றும் அவருடைய மனைவியும், எனது தந்தை மற்றும் நானும் இருந்தோம். சம்பவம் நடந்து முடிந்த பின்னர் தான் நான் அங்கு சென்றேன் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சுமார் 11.30 மணியளவில் சென்றிருப்பேன். போலீசார் 02.30 மணி முதல் 03.00 மணயளவில் மருத்துவமனைக்கு வந்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நான் குரிசிலாப்பட்டு காவல் நிலையத்திற்கு எப்போது சென்றேன் என்றால் நான் இந்த வழக்கு சம்பந்தமாக செல்லவில்லை. மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் அளித்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனது தாயாரை சம்பவயிடம் சென்று விசாரித்தார்கள். அந்த சமயம் நான் மருத்துவமனையில் இருந்தேன். மருத்துவமனையில் அளித்த புகார் வாக்குமூலத்தில் போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நான் அளித்த வாக்குமுலத்ததை தான் எழுதினார்கள். எதிரியை நாங்கள் தாக்கியதாக எங்கள் மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான், அது

பொய் வழக்கு. நாங்கள் தான் எதிரியை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரி எங்களை தாக்கியதாக எதிரி மீது பொய்யான புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின்போது சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.04.27 18:00:42 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.